முருகப்பெருமான் துணை

**மகான் ரோமரிஷி அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.08.2023**, வெள்ளிக்கிழமை

1. மண்ணுலகம் காக்க வேண்டி
 மாதவசியாக வந்த அரங்கா
 இன்னாளில் உன்பெருமை கூறி
 இயம்புவேன் சோபகிருது யாளி திங்கள்
2. திங்களிலே அட்டமதிகதி புகர்வாரம்
 (சோபகிருது வருடம் ஆவணி மாதம் 08 ம் நாள், 25.08.2023, வெள்ளிக்கிழமை)
 தேசிகனுக்கு ரோமரிஷி யானும்
 ஓங்காரம்பட அறிவுரை ஆசியுரைப்பேன்
 ஓங்கார குடில் படைத்து அருளும்
3. அருளும் ஞான வள்ளலே
 அறமோடு நீ தரும் வழிகாட்டல்
 இருளான மாயை சோதனைகள்
 எல்லாம் விரட்டி மனிதகுலம் காத்து
4. காத்துமே கடைத்தேற்றம் தரும்
 கருணை கொண்டவழிகாட்டல்
 உத்தமர்களாய் மக்களை மாற்றி
 உண்மைபட வாழ வழிகாட்டி
5. வழிகாட்டி பொறி புலன் வழி
 வகை தொடரா சலனமுறா
 தெளிவூட்டி அரங்கனுன் மார்க்கம்
 தெய்வபலம் மக்களுக்குக் காட்டுமப்பா
6. அப்பனே தோற்றம் அரங்கனாய்
 அனுகி சரணாகதிபடவே
 ஒப்புக்கொண்டு அகக் கண்ணில்
 உன்னை காணும் மக்களுக்கு

7. மக்களுக்கு சடாட்சர பலமாக
மகான் சுப்பிரமண்யராய் தெரிவாயப்பா
தேக்கமின்றி உன் வழி கண்டிட
தெய்வப் பிறவியாக மக்கள் தானும்

8. மக்கள் தானும் தன்நிலைமாறி
மரணம் வெல்லும் சக்தியும்
ஆக்கமுடன் மறுமை வென்றும்
அழியாமை தனை அடைவர்

9. அடையவே தனிப்பெருங்கருணை
அடையாளம் பெற்ற மக்களாய்
தடையற தருமம் வளர்த்து
தரணிக்கு வறுமை சேரா வண்ணம்

10. வண்ணமுடன் தடுத்து காத்து
வளர்ச்சிப் பாதை நோக்கி
எண்ணமெல்லாம் செல்லவே
இந்த உலகையே பாதுகாத்து

11. காத்துமே ஞானவான்கள்படை
கலியிடரை விரட்டி ஞானத்தலைமை
உத்தமமாய் அமைய வகை செய்து
உலகமாற்றம் தந்தருள்வர்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—